

# திறவுகோல்

2053

வைகாசி

மாத இதழ்

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கும் ஒவ்வொருவரும் சே தான்

சே வாழ்க்கையை அற்ப விஷயத்துக்காக தொலைத்துவிடுபவர்களுக்கு முன்பு நீ உயர்ந்து நிற்கிறாய். அமெரிக்கா என்னும் மதம் பிடித்த யானையை எதிர்க்கும் துணிச்சல் உனக்கு எங்கிருந்து வந்தது. சே உனது கால்கள் பல தேசங்களைக் கண்டது. உனது ஆன்மா அங்கு ஆள்வோருக்கு எதிராக புரட்சி விதையை விதைத்தது. மண்டியிட்டு வாழ்வதைவிட நிமிர்ந்து நின்று சாவதே மேல் என்று எங்களுக்கு உணர்த்திச் சென்றிருக்கிறாய். நாங்கள் ஆள்வோருக்கு மட்டுமல்ல ஒருசா ன் வயிற்றுக்கும் அடிமையாக இருப்பவர்கள். பேரம் படிந்தால் விலைபோகக் கூடியவர்கள்.

பெண்களைத் தவிர்த்து வேறு எதையும் யோசிக்கத் தெரியாதவர்கள். மணல் வீட்டில் குடித்தனம் நடத்துகிறோம் என்பதை அறியாதவர்கள். மூழ்க்கக் கூடிய கப்பலில் இருந்து கொண்டு வாழ்க்கையைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பவர்கள். நான் தான் கடவுள் என்று சொல்லும் வேடதாரிகளிடம் எளிதில் ஏமாந்துவிடக் கூடியவர்கள். உயிர்பிழைக்க வேண்டுமென்றால் விதை மண்ணைப் பிளக்க வேண்டுமென்று அறியாதவர்கள்.

தப்பிக்க கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் தவறவிட்டவர்கள். உலகைப் பற்றி நாட்டைப் பற்றி மக்களைப் பற்றி சரியான கொள்கை இல்லாதவர்கள். அரசியல் சதுரங்கத்தில் எந்தக் காய்களை யார் நகர்த்தினால் என்ன நாம் நாட்களைக் கடத்தினால் போதும் என்ற மனமுடையவர்கள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுபவர்களால் தான் வரலாற்று நாயகர்களாக முடியும் என நிரூபித்துக் காட்டியவன் நீ. கியூபாவின் விடுதலைக்காக சிலுவையையும், முள்கிரீடத்தையும் சுமந்தவன் நீ. அதிகார வெறி என்றுமே உன்னிடத்தில் இருந்ததில்லை. கியூபா மக்களுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவன் நீ. சேகுவேரா இது வெறும் பெயரல்ல மந்திரச்சொல். இந்தப் பெயர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையே குலை நடுங்க வைத்தது. ஆண்டான், அடிமை முறை உலகத்தில் எந்த மூலையில் காலூன்றினாலும் அங்கு ஒரு சேவை நீங்கள் பார்க்கலாம்.

நீ ஊமையாய் இருக்கும் வரை உலகம் செவிடாய் தான் இருக்கும் என்று சொன்னவன் நீ. உன் வாழ்நாளின் பெரும் பகுதி போர்க்களத்திலேயே கழிந்தது. உன் காதுகள் குண்டுச் சத்தத்தைக் கேட்டுப் பழகியவை. என்றோ எழுதப்பட்ட விதிக்கு சலாம் போட்டுப் போயிருந்தால் இந்த சேகுவேரா என்றோ மறக்கப்பட்டிருப்பான். மக்கள் தங்கள் தேசத்தை மீட்டெடுக்க ஆயுதம் ஏந்துவது தான் ஒரே தீர்வு என்று சொன்னவன் நீ. மரணத்தை

நெஞ்சுரத்தோடு எதிர்கொள்ளும் துணிச்சல் உனக்கிருந்தது. காஸ்ட்ரோவும் நீயும் துப்பாக்கியின் இரட்டைக் குழல்கள். ஆயுளில் பெரும்பகுதியை போராட்டத்துக்காக செலவழித்தவனை இந்த உலகம் பார்த்திருக்காது. அமெரிக்காவின் கழுகுப் பார்வை உன்னைத் துரத்திக் கொண்டே இருந்தது. போராளிகள் சாகடிக்கப்படலாம் ஆனால் ஒருபோதும் தோற்கடிக்கப்படமாட்டார்கள். எங்கே வாய்கள் ஊமையாகிறதோ எங்கே சிந்தனை சிறைப்பிடிக்கப்படுகிறதோ எங்கே அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகிறதோ அங்கே புரட்சி வெடிக்கும். ஒவ்வொரு போராட்டத்திலும் கையில் ஏந்தப்படும் தீப்பந்தம் நீ ஏற்றி வைத்ததுதான்.

பிறந்தோம் இறந்தோம் என்பதல்ல வாழ்க்கை அநீதிக்கு எதிரான போராட்டத்தில் உயிரை துச்சமென மதித்து கலகக் குரல் எழுப்புவாயானால் நீ ஒருவனே மரணத்தை வென்றவன். மக்களை மந்தை ஆடுகளாகக் கருதியவர்கள் உன்னைக் கண்டு நடுநடுங்கினார்கள். அச்சுறுத்தலுக்கு பயந்து வாழ்வை அடமானம் வைத்து விடாதே உன் சிந்தனையால் சிறைக்கதவுகளைக் கூட உடைக்க முடியும் அடிமையின் கலகக் குரல் ஆள்வோருக்கு கேட்கட்டும் என்றவன் நீ.

மெழுகுவர்த்தி போன்று தன்னை அழித்துக்கொண்டு தரணிக்கு ஒளி தந்தவன் நீ. ஒரு தலைவன் எப்படி இருக்கவேண்டுமென்று நீ வாழ்ந்து காட்டினாய். எண்ணிக்கையில் அல்ல வெற்றி போர் செய்யும் முறையில் தான் இருக்கிறதென அமெரிக்காவுக்கு புரியவைத்தாய். உன் எந்தப் புகைப்படத்திலும் பயம் என்ற ஒன்றை நாங்கள் பார்த்ததேயில்லை. உனது வார்த்தைகளின் சக்தி உலகத்தின் போக்கையே மாற்றியது. சே என்ற ஒரு எழுத்து அமெரிக்காவையே குலை நடுங்க வைத்தது.

மதமும் மதஅமைப்புகளும் தான் மக்களின் அடிமைத்தனத்துக்கு காரணம் என்றவன் நீ. உலகம் உறங்கிக் கொண்டிருந்த போது நீ விழித்துக் கொண்டிருந்தாய். க்யூபாவின் விடுதலைப் போர் வெற்றியடைய உன் போர் வியூகமும் ஒரு காரணம். அடிமைப்பட்டு உறங்கிக் கிடந்த மக்களை விழித்தெழச் செய்ய பல தேசங்களுக்கு உன் கால்கள் பயணப்பட்டது. விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம் இதுதான் உனது தாரக மந்திரம். தேசம் என்பது வெறும் மண்ணல்ல மக்களின் உயிர்மூச்சு. கோழைகளே நீங்கள் கொன்றது சேவையல்ல சேவை யாராலும் கொல்ல முடியாது.

உங்களின் தோட்டாக்கள் பயந்தவனைத்தான் உயிரைக் குடிக்கும். சே என்ற சாதாரண மனிதன் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களிடம் புரட்சி விதையை விதைத்துச் சென்றிருக்கிறான். தட்டிப் பார்ப்போம் திறக்க மறுத்தால் தகர்த்து எறிவோம் என்ற வாக்கியம் இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும் பொருந்தும். மரணம் ஒருமுறை தான்

அது போராட்டக் களத்திலேயே போகட்டும் என்றவன் நீ.

உங்கள் விதியை நம்பிக் கொண்டு இருக்காதீர்கள் உங்கள் விழிகள் சிவக்காமல் வழி பிறக்காது என்றவன் நீ. ஒரு நாடு அடிமைப்பட மக்களிடம் கல்வியறிவு இல்லாதது தான் ஒரே காரணம். எதிர்நீச்சல் போடுபவர்களைத்தான் நாளைய வரலாறு தன் வாரிசாக்கிக் கொள்ளும். நீ உன்னை பாவி என்று குற்றவுணர்வு கொள்ளச் செய்வதன் மூலம் மதம் வெற்றி பெறுகிறது. சுவர்க்கத்தின் ஆசைக்காக உங்கள் வாழ்க்கையை அடகு வைக்காதீர்கள். காட்டையே அழிப்பது சிறுதீப்பொறிதான்.

எல்லோரையும் போல் சாதாரணமாக பிறக்கலாம் எல்லோரையும் போல் பத்தோடு பதினொன்றாக நாம் சாகக்கூடாது. எதிர்ப்பது யானையை என்று தெரிந்தும் அச்சம் கொள்ளாதவனே உண்மையான நாயகன். நூறாண்டுகள் வாழ்வது பெரியதல்ல மறைந்த பிறகும் உலகம் நம்மை நினைக்க வேண்டும். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம். சே தொடங்கி வைத்தது இன்னும் முடியவில்லை. உலகிற்கு ஒரு சூரியன் அது சே தான். அவர்கள் நினைப்பது போல் அல்ல நீ வாழ்கிறாய் சே.

—

ப.மதியழகன்,
115, வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
கைப்பேசி:9597332952
பகிரி: 9384251845.



# நடுத்தெரு ஆட்டம்

## 1. ஐஸ்வண்டி

அதோபாரு தெருவிலே
ஐஸ்வண்டி போகுது
அவசியமா வாங்கித்தின்ன
ஆசை நெஞ்சை உசுப்புது

கையில் காசு இல்லையே
கடன் கேட்க தயங்குது
கம்புசோளப்  பானைக்குள்ளே
கைகள் தேடி துழாவுது

எதுவுமில்லை பழங்கலத்தில்
ஏக்கம் தொண்டை அடைக்குது
மாடி வீட்டு அக்கா தின்னும்
மஞ்சள் ஐஸ் அழைக்குது

வாசல் வந்து பார்க்கும்போது
வண்டிதூரம் போகுது
சோகமுகம் கண்டஆயா
சுருக்குப்பைத் திறக்குது

ஐஸ் வாங்கித் தின்பதற்கு
ஐந்து ரூபாய் கிடைச்சது
காசு தந்த ஆயாவிற்கு
கப்ஐஸ் வாங்கிடு

குச்சி ஐஸ் தின்னலாம்
கோன் ஐஸ் தின்னலாம்
சட்டையில ஒழுகும் முன்னே
சப்பிசப்பி உறிஞ்சலாம்

நாக்கெல்லாம் வண்ணமாகும்
நண்பனிடம் காட்டலாம்
நண்பனுக்கும் வாங்கித்தந்து
நட்பின்சிகரம் ஏறலாம்.

## 2. நிலாவே வா!

நிலாநிலா வாவா
நிறைமதியே மெல்லவா
நீதிநெறி சொல்லவா
நியாங்களை வெல்லவா

மழையைப் பூவாய் தூவிவா
மலையில் பசுமை செய்துவா
மரஞ் செடிகள் தழைக்கவா
மாசுகளை ஒழிக்கவா

போட்டி நிறைந்த உலகிலே
பொறுமையில்லை வாழ்விலே
ஆசைப்பேயின் காலிலே
அடிமைகளாய் மனிதரே

ஈகையறம் பரப்பவா
இரக்கம் கருணை சிறக்கவா
அனைவரையும் மீட்கவா
அருள் ஒளியால் காக்காவா

சோகங்களைப் போக்கவா
சொந்தங்களைச் சேர்க்கவா
வறுமைதனை துறத்தவா
வளங்களையே கொழிக்கவா

பெண்கள் புகழ்போற்றவா
பேதைமைகள் ஓட்டாவா
மனிதநேயம் உணர்த்தவா
மறுமலர்ச்சி பிறக்கவா

முயற்சிகளால் உயர்த்தவா
மூலதனம் செழிக்கவா

மூடத்தனம் ஒழிக்கவா
முன்னேற்றம் கொடுக்கவா

ஏழைகளைக் காக்கவா
ஏற்றத்தாழ்வு அழிக்கவா
நம்பிக்கையை விதைக்கவா
நல்லொழுக்கம் நிறைக்கவா

## 3. கண்ணாமூச்சி

ஓடிவாடி தங்கச்சி
ஒளிந்தாடலாம் கண்ணாமூச்சி
கண்டுபிடிப்பது யாருடி?
கண்ணைமூடி தேடுடி!

மூட்டைப்பின்னால் ஒளியலாம்
மூஞ்செலியை விரட்டலாம்
கட்டில்கீழே மறையலாம்
கட்டிவெல்லம் ருசிக்கலாம்

சமையலறையில் ஒளியாதே
சட்டிப்பானையை உருட்டாதே
முற்றத்தூணில் பதுங்கவோடி
முட்டிமோதி அழுவாதே

தொம்பைசந்தில் நுழையும்போது
தூங்கும்பூனை சீரலாம்
கொல்லைபுறக் கிணற்றின்பின்னே
கொசுக்கடித்து ஊறலாம்

கொலுசொலியின் சத்தங்கொண்டு
குறிவைத்துப் பிடித்திடு
சிணுங்கும்வளை ஓசைகேட்டுச்
சீக்கிரம்போய் தொட்டிடு

கையும்காலும் கண்களாகி
காற்றின்வெளியில் துழாவிடும்
இருட்டினச்சம் மாயமாகி
இன்பம்பாலாய் பொங்கிடும்

கண்ணாமூச்சி ஆட்டமாடி
கண்களருமை உணர்ந்திடு
கண்களின்றி வாழ்ந்திடுவார்
கஷ்டங்களில் உதவிடு!

## 4. எக்கா எக்கா ஏலக்கா

எக்கா எக்கா ஏலக்கா
எழுந்து நின்னா சோளக்கா
சொக்கா போட்ட வாழைக்கா
சொத்தை இல்லா பாவக்கா
விக்க வைக்கும் புளியங்கா
விருந்து போடும் வெள்ளரிக்கா
வெள்ளைமுத்து வெண்டைக்கா
வெட்கப்படும் கோவைக்கா
கொத்துக்கொத்தா அவரைக்கா
குண்டுவயிறு  பூசிணிக்கா
முக்கா டவுசர் பேரிக்கா
மூக்கொழுவும் முந்திரிக்கா
நீலம்போட்ட கத்திரிக்கா
நீண்டமூக்குப் பீர்க்கங்கா
நெட்டை வாலு பொடலங்கா
நெத்திச் சுட்டி சுண்டைக்கா
கோலிகுண்டு நெல்லிக்கா
குழம்பில் போட்டு ஆக்குக்கா
கும்பல்கூடி தின்னுக்கா
குட்டிக்கரணம் போடுக்கா!

## 5. எங்கள் பள்ளி

அழுக்குச்சொக்காய் தம்பி
அழுகையேண்டா தேம்பி
ஒழுகும் மூக்கைச் சிந்துடா
ஒழுங்காய் தலையைச் சீவுடா

முகத்தை நீரால் கழுவிக்கோ

முல்லைப்பூப்பொல் சிரிச்சிக்கோ
என்னவேண்டும் சொல்லுடா
இந்தாமிட்டாய் தின்னுடா

எனக்குநிறைய நண்பர்கள்
இருக்கிறார்கள் பள்ளியில்
என்னுடனே சேர்ந்துவா
எல்லோரையும் காட்டுறேன்

பாடங்களைப் படிக்கலாம்
பாட்டுப்பாடி களிக்களாம்
ஓடியாடி மகிழலாம்
ஒன்னுகூடி பழகலாம்.

—

பொன். தெய்வா,
ஐவேலி
விழுப்புரம் மாவட்டம்



---

## துளிப்பாக்கள்

பிரமாண்டத்தை உள்வாங்க
வெற்றிடமாகிறது
கடலை ரசிக்கும் மனம்

சுயநலமிக்கோர்களிடம் போராடி
தோற்றப் பின்பும் மிச்சமிருக்கிறது
என்னுள் புன்னகை

மழை மேகம் மலையை மூட
வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது
பேரழகு

பள்ளித் திறந்ததும்
என்னோடு பயணிக்கின்றன
மகிழ்ச்சியும் பரபரப்பும்

பண்டிகைக்காலங்களில்
கூட்ட நெரிசல்
தியேட்டர் வாசலில்

கவிதைப் புத்தகம்
வாசிக்கும் போதெல்லாம்
ஏகலைவன் ஆகிறது மனம்

—

பெ.விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.



# எது கவிதை?

கவிதை என்பது யாது ?

அது சொற்களின் கூட்டா ?
வாக்கியங்களின் தொகுப்பா ?

எதுகையும் ,
மோனையும் தவழ்ந்திடும் முன்றிலா ?

எதுவொன்று இறவாத நெல்லியை
ஔவைக்கு அதியமானை நீட்டச்
செய்தது ?

எதுவொன்று
பாரியை முன்னூறு ஊர்களையும்
பாவலர்க்கே
வாரி வழங்கச் செய்தது ?

எதுவொன்று கம்பனையும்
,காளிதாசனையும்
இன்றும் நம்மோடு
பயணிக்க வைக்கிறது ?

எதுவொன்று வைரமுத்துவையும்
,வாலியையும்
நம் இருக்கைகளில் அமரச் செய்து
சிம்மாசனமிட்டுச் சிரிக்கிறது ?

எதுவொன்று
ஆனந்த யாழை மீட்டுகிறாள்...

என்கையில் விழியோரம் கண்ணீரைத்
துடைத்தபடியே
நா.முத்துக்குமாரின் வரிகளில் நனைய
விடுகிறது...

அத்தனைக்கும் பொருள் தேடுங்கள்.

உங்களுக்குள்ளே வினா எழுப்பிக்
கொண்டேயிருங்கள் எது கவிதை.

கவிதை எங்கு கிடைக்கும் ?

கைநீட்டி நம்மிடம் பிச்சை கேட்கும்
பெரியவர் சிந்திப் போகலாம் நமக்காக
ஒரு கவிதையை...

தெருவோரத்தில் சிறுநீர் கழித்தபடி
சுயநினைவற்றுச்
சொற்கள் உதிர்க்கும் குடிகாரன்
கொட்டிவிட்டுப் போகலாம் நமக்கான
கவிதையை...

அள்ளும் புன்னகையோடு
அகிலத்தில் நடமாடும் பிள்ளையின்
பாதம் சுரந்துவிடலாம் நமக்கான
கவிதையை ...

பொத்தென்று ஒரு மாமிசத்துண்டை
போட்டுவிட்டுப் பறக்கும் காகம்
கரைந்துவிட்டுப் போகலாம் நமக்கான
கவிதையை...

மாமிசம் கவ்வும்
நம் வீட்டுச் செல்ல பொம்மரேனியன்
குரைக்கலாம் நமக்கான கவிதையை...

வெட்டும் மின்னல்,

கொட்டும் பனி,
தட்டுகிற கதவு,
எட்டுகிற இரைச்சல் எங்கும் ,எங்கும்
நிறைந்தே கிடக்கிறது கவிதை.

வெறும் எதுகை,மோனை கொண்டு
எழுத்துகளால் வடிப்பதா கவிதை...

இல்லை ,நிச்சயமாக இல்லை

அது இதயத்தால் வடிப்பது...

சலனமற்றுக் கிடக்கும் குளத்தில் எறியும்
கல்லைப் போல ஒரு அலையடிக்கக்
காரணமாவது.

ஆம் தினம் தினம்
நீங்கள் பார்த்த ,படித்த ,கேட்ட
அத்தனையையும் உங்கள் முகக் கொண்டு
பாராமல்,
அகக் கண்கொண்டு தேடத்
தொடங்குங்கள் ...

உங்கள் தேடலில் கிடைப்பதைச்
சட்டென எழுதாதீர்கள் ,

இதயத்துள்ளே அசைபோடுங்கள்.

ஒருமுறை,இருமுறை,
நூறுமுறை ஒவ்வொரு முறையும் மாறிடும்
பரிணாமத்தில் என்றேனும் ஒருநாள்
நீங்கள் வரைந்த சொற்கள் உங்களைச்
சிலாகிக்கும்...

சிலாகிக்கும் வரை திருத்திக்
கொண்டேயிருங்கள் ...

சிலாகித்தல் ஒரு நாள் சித்திரமாகும்...

உங்கள் சித்திரங்கள்
எல்லா இல்லங்களின் சுவர்களில்
அறையப்பட்ட ஆணிகளை
லகுவாக்கும்...

இலகுவாகட்டும்
இதயங்கள் இன்றே தொடங்குங்கள்
உங்களின் தேடலை.

தேடல் தொடரும்...

—

இனியவன் காளிதாஸ்.

# 1. சிந்தனை 1000

கால் தடுக்கிய கணவனுக்கு
நீர் கொண்டுவரும் பெண்ணுக்கு
ஒவ்வொரு மழைத்துளியும்
பல இன்னல்களை கடந்துதான் இங்கு
தாகம் தணிக்கிறது
என்பதை மறப்பது சற்று
கவலைக்கிடமே....
சொட்டாமல் சொட்டுர் ஒரு சொட்டுக்
குருதியே.....

---

குத்தும் பொழுதெல்லாம்
வலி தெரியாத அம்மைக்கு மரத்தையே
பற்றி ஆடும்
காற்று கிள்ளி விட்ட குழந்தையின்
அழுகையில் கிடைத்த வலி மாபெரும்
வலியாகிறது....

---

கனவுகளுக்கு விதைப்போட்ட
அப்பாவிற்கு தெரியாது
தான் இருக்கும் பொழுதோ
இறந்த பிறகோ
தனது கனவு மகனால்
விருட்சமாகுமென்று
ஆனால் கனவு பிரித்து வழங்கப்படுகிறது
பிறந்த ஐந்து மகன்களுக்கும்........!

---

தினம் தினம்
வழிபட முடியாத கடவுளைக் கொண்ட
அப்பனுக்கு
ஒரு செம்பில் நீர் தந்து
அருள்பாலித்து அனுப்புகிறாள் மகள்...

---

வளர வளர தானாய் விழும் சருகு பாலை
போல தன்னைத் தானே உதிர்த்து விட்டு
இடம்பெயர்கிறது முதுமை
சில இடங்களில் நடை பயணமாய்...
பல இடங்களில் நடை பிணமாய்.....

---

நீ யாரென்பது அறியாமலே
பயணிக்கின்றது நிழல் உன்னுடன்......
உனை அனை அறிந்தவுடன்
பற்றிக்கொள்கிறது இருள்
உறைந்து கொள்கிறது நிழல்....

---

தட்டு நிரம்பிய சில்லரைகளையும்
நெற்றி வழியும் வியர்வையும்
ஒன்று கலக்க செய்துவிடுகிறது
இந்த உச்சி வெயில் என்மீது கொண்ட
செய்வினை...
சில்லரை நெருப்பாகும் வரை...!

---

தேடியவை போதவில்லை என
வேகுவேகுவென விரைந்து செல்கிறான்
ஒருவன்...
கிடைத்தது போதுமென
சம்மளமிட்டு அமர்கிறான் ஒருவன்...
இருவரையும் கடந்து இதமாக பறந்து
செல்கிறது ஒற்றைக்குருவியாய் ஓர்
பருந்து வாழ்க்கை....!

---

வாரம் இருமுறை மலர் கொண்டு பூசை
செய்யும் அப்பாவின் முன் அமர்ந்த
கடவுளுக்கு
மலம் அள்ளும் வாசனையில் சோடித்த
கடவுளாக காட்சியளிக்கிறார் அப்பா...!

---

மூழ்கிய இலைகளில் எல்லாம்
இல்லாமல் போய்விடுகின்றன
இந்த முட்டாள் மனிதர்களை போலான
முகமுடிகள்....!

---

மலை ஏறினாலும் மச்சான் துணை
வேண்டும் என்பர்
இங்கு கூரை ஏற நாமே ஏணி போட
வேண்டி உள்ளது...

சாலைகளுக்கு பார்வைகளை
கொடுக்காதே
பாதங்களை கொடுத்து செல்

நிமிர்ந்து பார்க்கும் வேளையெல்லாம்
உன் வெற்றியின் நெற்றியை பார்ப்பதாய்
உணரு....

துணிச்சல் என்பது விலகி நிற்பது அல்ல
விவேகத்தை விவகாரத்தின் அருகில்
வைப்பது.....!/

---

கொட்டிய மழையில் விரிசலிலும்
இடைவிடாது வீசுகிறது..
விதைத்துவிட்டு வியர்வை துடைத்து
விரிந்தோம்பலுக்காக காத்திருக்கும்
வவசாயியின் துயரம்......!

---

அன்று பார்த்த அதே நடை
இன்றும் பற்றியுள்ளது
உன்னிடம் எந்த மாற்றமுமின்றி....
அன்று என்விரல் பிடித்து நடந்தபடி
இன்று என் பெயர் கொண்ட உன்
மகனின் விரல் நுனி பிடித்தப்படி......!

## 2. ஏழு துளிகளில் வண்ணம்

செய்தேன்
உனை தீண்டலில் மட்டும்
வன்மம் கொண்டேன்
தூரிகை வேண்டாம்
விரல்கள் கொண்டா
விசை கொடுத்து
திசை திரும்ப பழகி
மொத்தமும் உன்னிடம்
ஒப்படைத்து
மௌனித்து நகர்கிறேன்
பிறிதிமொரு வண்ணமாய்
நீயும்
துளி நானும்.....
*

இன்று காலையும்.....

---

தலைவிரி கோலத்தில்

கையில் சிறு
தேநீர் கொண்டு அறைக்கு வந்தவள்
என்னை ஏற இறங்க பார்த்து டம்ளர்
நிறைந்த தேநீரை டேபிளில் அமர
வைத்து முகத்தில் பாதியாய்
மூக்கையும் இதழையும்
சுழித்து கடக்கிறாள்
கதவுகள் விட மறுக்கின்றன
நேற்றைய நிகழ்வுகளை.........
எழுந்து குடித்த
தேநீரில்
அவள் சுழிப்பின் சுவையே ஆடையாக
படிந்திருந்தது.......
அவளாய்....

*

உப்பைத் தின்றவன்
தண்ணீர் அருந்தியே ஆகவேண்டும்.....
உன்னை அருந்திய எனக்கு
என்னையே நீ தின்றது
தெரியாமல் போய்விட்டது......
நீ என்னை தின்றதற்கு
என்னையே பருகுகிறாய் நீ
உன்னையே பருகுகிறேன் நான்.....

*

எரிவதில் பிடிங்கியது லாபமெனில்
எரிதலில் எத்தனை அனல்
பிறக்குமோ...........
வலிக்கு வடிவம் கொடுத்து இறுதியில்
சொட்டும் ஒரு சொட்டுக்கு வடிவம்
கொடுத்து பரவளையமாக்கி
விட்டேன்.....
கல்லெறிந்த சுவற்றில் மிஞ்சியிருக்கும்
கல்லின் சிறுதுகள் போல் தட்டான்கள்
தொட்டு செல்வதாய் மாறிவிடுகிறது
தூரமாய் நின்று வாரி வழங்கும் வழக்கம்
கொண்ட வலித்தீ உணர்விற்கு
ஒரு சிறிய வலி இருக்கதான்
செய்கிறது......
அவளுக்கும் அவனுக்கும் பற்றிய தீ
அவ்வப்போது வலித்தீயாக பரவுவது
இயல்பாகிறது.......
வலித்தீயாய்..........

*

எனது
நுகர்ச்சித் ததும்பிகளில்
சுரப்பிகளாய்
கலந்துவிட்ட உனக்கு
என் காதல் வாசம்
எப்போது வீசிவிடுமோ....
அன்று தெருவோரத்தில்
இன்று கதவோரத்தில்
காதல் சாவி கொண்டு
தடுமாறுகிறது
என் அன்பிடமும்
அவள் கோவத்திடமும்......

—

கவிஞர் சே கார்கவி,
நாகப்பட்டினம்.



# மொழி

உருவமில்லா
மனதைக் கொல்ல
பல நேரங்களில்
உருவமில்லாத சொற்களும்
சில நேரங்களில்
சொற்களில்லாத மௌனமும்!

இதழ் வில்லை இழுத்து
எய்தப்படும்
வார்த்தை அம்புகளால்
விழுந்து கிடக்கும்
இதயங்களை மீட்க
தேவைப்படுகின்றன
சில வார்த்தைகளும்
மௌனங்களும்!

ஒரே
வாயிலிருந்து பிறக்கும்
ஒவ்வொரு வார்த்தைகளும்
வெவ்வேறு குணங்களோடு
வெவ்வேறு எடைகளில்!

கோபப் புயலால்
எல்லாவற்றையும்
கொட்டி விட்டு
அள்ள முடியாமல் தவிக்கும்
மனிதனிடமிருந்து
தீண்டத்தகாது என்று
தள்ளியே நிற்கின்றன
உறவுகள்!

இணைப்பு மொழியென
திணித்துக் கொண்டிருக்கும்
வேளையில்
சன்னலோரமாக குழந்தை
பேசிக் கொண்டிருக்கிறது
இயற்கையிடம்!

மலரக் காத்திருக்கும்
மொட்டிற்கு
எத்தனையோ பெயர்கள்
பல மொழிகளில்!

இருந்தும்
கதிரவனின் பார்வை மொழிக்காக
காற்றின் முத்தச் சத்தத்திற்காக
வண்டின் ரீங்கார
இசை மொழிக்காக
மலரக் காத்துக் கிடக்கிறது

முடிந்தால்
உங்கள் மொழியைத் திணித்து
மலர விடுங்களேன்!

—

சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732.



# எதுவும் கடந்து போகும்.

மனது என்ன தானே மாயைக்
காட்டினாலும்
தோல்வி என்ன தானே துரத்தி
ஒட்டினாலும்
கனவு என்ன தானே களைந்திட
நினைத்தாலும்
நிகழ்வு நினைத்த வற்றை நிகழ்த்திட
மறுத்தாலும்
உலகின் மக்கள் உனையே உதறித்
தள்ளினாலும்
முயற்சிக் கேத்த முடிவே கிடைத்திட
மறந்தாலும்
மழை மேகமெனக் கண்கள் கண்ணீரை
கரைந்தாலும்
சோகங்களைச் சுமந்து நெஞ்சம் சோர்ந்து நடந்தாலும்
வாழ்க்கை உன்னை நிதமும் வாட்டி
வதைத்தாலும்
இதயத்தின் வலுக் குறைக்க இதெல்லாம் நடந்தாலும்
நினைவில் மட்டும் கொள்ளும் நம்பிக்கை என்றும் வெல்லும்
காலம் பதில் சொல்லும்
காத்திருப்பு என்றும் கைக்கூடும்
தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் விடாமல் பிடித்துப்போகையிலே
பெரும்பிறவிக் கடலைக் கடப்போமே!

—

இரா.ரம்யபாரதி.



# கல்வியும் ஒழுக்கமும்

கல்வியின் சிறப்பு ஞாலத்தில் பெரிது!
கல்வியும் கிடைப்பது வாழ்வினில் அரிது!!

கற்றவர் மதிப்பு வானிலும் உயர்வே!
மற்றவர் அதனை அறிதலும் மகிழ்வே!!

கற்றவர் பெருமையை அகிலமும் சொல்லும்!
கற்றால் தானே வாழ்க்கையும் வெல்லும்!!

சூரியன் சந்திரன் வானத்தில் போலவே!
கல்வியும் ஒழுக்கமும் வாழ்வினில் வெளிச்சம்!!

இரண்டுமே ஒன்றாய் எம்மிடம் சேர்ந்தால்,
வாழ்க்கை முழுதும் வசந்தமே பூக்கும்!!

நகமும் சதையும் இணைந்தது போலவே,
உடலும் உயிரும் உணர்வாய் ஆனதே!!

காற்றும் நீரும் கலந்தது போலவே,
பூவும் வாசமும் சுவாசமாய் ஆனதே!!

கல்வியும் ஒழுக்கமும் வாழ்கையில் தேவை,
கற்றல் முடிந்தால் கற்பித்தலே சேவை!!

இன்று கல்வி முறைகள் ஆயிரம் இருக்குது,
ஒழுக்கம் அதிலே ஒளிந்தே கிடக்குது...

—

வாழ்வியல் கவி,
(சா.நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# பல்லக்கிற்கு நீயே பாடை கட்டு!

*சாமியைச் சுமப்பதே பாவம்
ஆசாமிகளைச் சுமத்தல் பெரும் பாவம்*

*யாரோ ஒருவருக்கு எப்போதும் தேவையாய் இருக்கிறது பல்லக்கில் இருத்தலும் சுமத்தலும்!*

*எல்லாமும் மாறிவிட்டது.*

*அடியார் யாரும் பிச்சையெடுத்து உண்பதில்லை.*

*நடந்து சென்ற காலடியில் மிதிபட்டு செத்துக் கிடந்தது பிற உயிரினங்களின் மீதான பேரன்பு!*

*அரசியல் சாமியார்களைத் தேடுகிறது
சாமியார்களோ அரசியலை ஆள்கிறார்கள்.*

*ஆன்மீகம் பெரு வணிகமயம்
ஆகிவிட்டது.*

*எல்லோரும் காசை கொட்டியழுது அமைதி தேடி அலைகிறார்கள்.*

*பல்லக்கிற்கு நான்கு கால்களில்லை
ஆனால் நால் வர்ணமுண்டு.*

*சத்திரியனை வைசியனை பஞ்சமனை சூத்திரனை ஒருபோதும் அது அமர அனுமதிப்பதேயில்லை.*

*மனிதரை மனிதர் சுமப்பது இழிவல்லவா?*

*அறம் போதிக்கும் ஆதீனம்
கற்றுக் கொடுக்கிறது
அடாவடித்தனம்.*

மனிதத்தன்மை அற்ற செயலைச்
சாட்டை சொடுக்கி அடிபணிய வைக்கிறது.

அடேய்!
ஆதிக்க வெறி பிடித்த அறிவிலிகளே!
நான்கு பேர் தூக்குவதாலேயே
அது பல்லக்கு ஆகிவிடாது.

பாடையைத் தூக்கிச் சுமக்கவும் அதே நான்கு பேர் தான் தேவை.

உயிருள்ள பிணம்
பல்லக்கில் போனாலென்ன?
பாடையில் போனாலென்ன?

பொதி சுமக்கும் கழுதைகள் கூட அருகிப் போய் விட்டன.

பல்லக்கு சுமத்தல் பெரும் குற்றம் அன்றோ?

துக்கச் சொல்பவனைத் தூக்கி எறி!

பல்லக்கிற்கு நீயே பாடை கட்டு.

—

அமுதாராம்,
மன்னார்குடி.

# பாவேந்தர் பாரதிதாசன்

பிறந்தநாள்
ஏப்ரல் - 29

திக்கெல்லாம் புகழ் மணக்கும்
 பாவேந்தர் பாட்டு
தமிழை வெறுப்போர்க்கு
 வைத்ததோர் வேட்டு

சுப்புரத்தினம் எண்ணத்தில்
 எழுந்ததோர் பாட்டு
சுவை ஆறும் கலந்திட்டக்
 கதம்பக் கூட்டு

கனியிடையேறிய சுளைகளில்
 கனியுமிவர் பாட்டு
கவிநயம் சிதறாத
 தமிழின் ஊற்று

தமிழுக்கு அமுதென்று
 பெயர் சூட்டிய
தாசன் பிறந்த
 புதுச்சேரியில்

பெயர்ப்பலகைகள்
 எல்லாம் தமிழில்
மாறுவதெப்போது?

## 2- சிறுகதை

புன்னகைக்குப் பின்னால்.....

ஆசிரியர் வந்தால்
கண்டுப் பிடித்து விடுவாரோ
என மனம் பட படக்க
பயந்தவாறே
அமர்ந்திருந்த
இளங்கோவனுக்கு
ஆசிரியர் மணி மேகலை
வகுப்பறைக்குள்
நுழைந்ததும் மேலும்
வியர்த்தது....

மாணவர்கள் வணக்கம்
கூறிய பின்பு
வகுப்பில் ஒரே அமைதி.
சில நிமிடங்களில்.....
டீச்சர்...நான் நோட்டு
வாங்க வைத்திருந்த
பணத்தை யாரோ
திருடிட்டாங்க....
என்ற அழுதபடி அமுதன்
கூற...
சரி..சரி.. அழாதே
என சமாதான படுத்திய
ஆசிரியருக்கு சட்டென
ஞாபகத்திற்கு வந்தது
நேற்று இளங்கோவன்
அம்மா " என்மகனைக்
கொஞ்சம் கண்டியுங்க
சார் என தலைமை
ஆசிரியரிடம் பேசிக்
கொண்டிருந்தது..
வகுப்பில் மேலும்
அமைதி...

அமுதனுடைய பணத்தை
எடுத்தவர்கள் யாராக
இருந்தாலும் என்னிடம்

வந்து யாருக்கும்
தெரியாமல் கொடுத்து
விடுங்கள்.
உங்கள் பெயரை
யாரிடமும் சொல்ல
மாட்டேன். இல்லையென்றால்
அந்தப் பணத்தை
நாளைக் காலை
யாருக்கும் தெரியாமல்
வகுப்பறையில்
ஏதோ ஒரு மூலையில்
போட்டுவிடுங்கள்
என்று கூறிசென்ற ஆசிரியரை
வகுப்பறையிலிருந்து
வெளியேறி சென்று
மறையும் வரை
பார்த்துக் கொண்டே
இருந்த இளங்கோவன்
மனம் இலேசானது.

"யார் திருடியது என
கேட்காமல், யார் எடுத்தது
என கேட்ட ஆசிரியரின்
நல்ல குணம்
எனக்கு மட்டுமல்ல
மாணவர்கள்
அனைவருக்கும்
பிடித்துப்போனது.

மறுநாள் காலை....
ஆசிரியர் வகுப்பறைக்குள்
நுழையும் போதே
மாணவர்கள் ஓடிவந்து,
வகுப்பறையில் கீழே
கிடந்த பணத்தை
எடுத்துக்கொண்டு
வந்துக் கொடுத்ததும்,
அப்போது தயங்கித்
தயங்கி பின்னால்
நின்றுக் கொண்டு
புன்முறுவல் செய்ததும்,
ஆசிரியர் எதையும்
கவனிக்க வில்லையென
மனம் திருப்திப்பட்டு
தன் இருக்கையில்
சென்று அமர்ந்துக்
கொண்டதும்
இன்றளவும்
இளங்கோவனுக்கு
நீங்கா நினைவுகளாய்
இருந்தாலும்...

ஆசிரியரைக் கண்டவுடன்,
குற்ற உணர்வின்
உந்துதலால்
ஓடிவந்து நான் தான்
அன்று அந்தப் பணத்தை
எடுத்தேன் என்று
கூறிவிடலாமென
ஆசிரியர்
அருகில் செல்லும்
போதெல்லாம்
தலைக் குனிந்து
கொள்ளும் என்னைப்
பார்த்து,
"என்ன இளங்கோவன்
என்ற ஆசிரியரின்
ஒற்றை வார்த்தையும்
"எல்லாம் எனக்கும்
தெரியும்" என்பது

போல் இருக்கும்
அவரது புன்னகையும்
இன்றளவும் என்னைக்
கண்டித்துக்கொண்டே
இருக்கின்றன.

------ முற்றும்------

எழுத்தாளர்
மு. ஜெரோஷா

பின் குறிப்பு:
உண்மை நிகழ்வு,
ஆனால் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

---

# 1) சிவராத்திரி

கனத்த ஒலியோடு
அரங்கேறுகிறது
நாடகம்

அடர்கிளைவிட்டு
நெடிய படர்ந்திருக்கும்
ஆலமரம் முழுக்க
கனிகளாகியிருக்கின்றன
'சீரியல் விளக்குகள்

வேண்டுதல்களின்
குவியல்களாய்
ஒளிர்ந்து கொண்டிருக்கிறது
மாரியம்மன் தோற்றம்

சூலாயுதமேந்திய
கரங்களில் நிற்கும்
கூண்டினுள் கிளிகளுக்கு
அன்றிரவு சிவராத்திரியாகிறது

மேடையில் மட்டும்
கழுகினை வீழ்த்துகிறார்
இராமன்!

# 2) வானிலை அறிக்கை

உன்னைப்போல
அவ்வளவு எளிதாக
கண்ணீர்
வாய்த்துவிடவில்லை

விழிசூழ்
கருமேகக்கூட்டங்களை
கலைக்க அத்தனை
சிரத்தையிலிருக்கின்றன
கண்கள்

உன்னின்
எண்ணவிசையிலிருந்து
நகர்ந்து பயணிக்கின்றன
மனமேகங்கள்

பிரிவின்
இவ்வானிலை அறிக்கையில்
மட்டும் பெய்யாத மழையளவையே
காட்டுகின்றன விழிநிலங்கள்!

## 3) விழிப்பு நிலை

ஆசையாய்
திருடும் பொழுதெல்லாம்
விழித்துக்கொள்கிறார்
புத்தர்

ஒரு முறை தூவல்
ஒரு முறை புத்தகம்
ஒரு முறை அழிப்பான்

மரத்தடியில் அமர்ந்து
உணவருந்துகையில்
தோழியின் தட்டிலிருந்து
கொஞ்சம் களவாடல்
என நீள்கிறது
களவாடலின் பட்டியல்

தேர்வறையில்
'ஆசையை அடக்கக்கூறியது'
யாரென்கிற கேள்விக்கு மட்டும்

சட்டென முன்தோன்றி
புன்னகை செய்கிறார்
சித்தார்த்தர்!

## 4) நினைவுச்சின்னம்

தூக்கியெறியப்பட்ட
ஒரு பேழை எதை
வேண்டுமானாலும்
செய்திருக்கலாம்

காதலோ கவிதையோ
கடிதமோ மனுவோ
புகாரோ

எதையோவோ அல்லது
எல்லாவற்றையுமோ
எழுதித் தந்திருக்கலாம்

உறவாடிய நெஞ்சொடு
நினைவுச்சின்னம்
ஒன்றினை தந்துவிட்டுச்
சென்றிருப்பதறியாமல்

கசிந்ததுளிக்காக
பரிகாசம் செய்யப்படுகிறது
இறுகப்பிடித்தத் தூவல்!

## 5) உறுத்தல்

பாகம்பிரித்து பத்திரம்
பதிந்துகொண்டவனுக்கு
இப்போது உறுத்துகிறது...

'குடும்ப அட்டையில்'
இணைந்திருக்கும்
பெயர்கள்!

—

ரகுநாத் வ,
மதுரை.

# 1 - நிஜங்கள்

தொலைந்துபோன
முகங்களில் முகமூடிகள்
தொங்க விடப்பட்டிருந்தன
தேடி அலைந்தாலும்
கிடைக்காத முகங்கள்

நிஜமாய் இருக்கிறேன் என
கரங்களில் உறுதியளித்து
காணாத இடம் நோக்கி
நகர்கின்றன சில முகங்கள்

புரிதலில்லா வாழ்க்கையில்
ஆளுக்கொரு பொய்யை
சுமந்து வாதிடுகின்றனர்
மன்றத்தின் மீதேறி
சில முகங்கள்...!

நிஜமாய் வாழ
பயிற்சியெடுத்த பின்னும்
நிஜங்கள் மட்டும்பயிற்சியோடு
நின்று விடுகின்றன.

உறவின் விரிசல்கள்
காலக்கோட்டிலல்ல
நிஜங்களாய் பயணிக்காத
வாழ்க்கையில்..!

வாக்குறுதிகள் அளித்தும்
பொய்யுரைகளை நம்பி
நிஜங்களில் தோற்றுப் போகும்
சில முகங்கள்..!

மனதில் இருப்புகள்
நிரம்பி வழிந்தாலும்
உண்மையும் பொய்யுமாய்
கலந்த கலப்படமாய்
வாழாதீர்கள் அன்னம் போல்
பிரித்தறிய கற்றுக்கொள்ளுங்கள்.

# 2 - கண்ணாடி தேசம்

பொய்மையை சூடாதீர்கள்
உரத்துச் சொல்லும்
நாவன்மை ஊமையாய்
பிரதிபலிக்கும்.

ஏளனங்களை
ஏற்புடையதாக்கி
நகைத்துவிடாதீர்கள்
சிரிப்பாய் சிரித்துவிடும்.

மெல்லிய ஓசையில்
வலை விரியுங்கள்
இதயமீன்கள்
துள்ளிக் குதிக்கட்டும்.

இமைத்து திறந்து
சுரக்கும் விழிகளை
துடைத்துவிடுங்கள்
முகம்காட்டிச் செல்லட்டும்
மனதின் இனிமையை...!

முகம்காட்டாமல்
வார்த்தைகளால்

குத்திக்கிழிக்கும்
சொற்களை தேடாதீர்கள்
வீசி எறியுங்கள்
முள் தைக்கும் வார்த்தைகளை..!

கல்லெறிந்து
உடைத்துவிடாதீர்கள்
கண்ணாடி குளங்கள்
நிலவாய் முகம்காட்டட்டும்..!

முட்களை
உற்பத்தி செய்யாதீர்கள்
மாறாக மெல்லிய
பூவிதழ்களை பறிக்காத
கரங்களை உற்பத்தி
செய்யுங்கள்..!

உன்னைக்காட்டும்
கண்ணாடியில்
போலியாய் சிரிக்காதீர்கள்
உண்மையான ரசங்கள்
விலகாமல் உயர்த்திகாட்டும்
உன்னை...!

சேதப்படுத்தாதீர்கள்
கண்ணாடி தேசத்தில்
நேசப்படுங்கள்...!
அன்பின் உரங்களை
விதைத்து செல்லுங்கள்
மரமாய் நின்று நிழலாய்
இடம் கொடுக்கும்...!

--

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# 1 - அந்த அடுக்ககத்திற்கு

வழக்கமாக பால் பாக்கெட்
விநியோகிக்கிறவன்
அன்று வழக்கம் போலில்லாமல்
சற்று தாமதமாக வருகிறான்

மாடியில் உள்ளவர்கள்
பால் பாக்கெட்டை
கயிறு கட்டிய கூடையில்
மேலே இழுப்பது வழக்கம்

அன்றும் வழக்கம் போல்
அந்த இளைஞன்
பால்பாக்கெட்களை வைக்க
மூன்றாவது மாடியில்
கோதுமை நிற குமரிப்பெண்ணொருத்தி
கயிற்றில் கூடை இழுக்கிறாள்
அந்த சமயம்
தலை உயர்த்தி
ஒரு ஏக்கத்துடன் பார்த்தது
அந்த இளைஞன் மட்டுமல்ல

தரை தளத்து
வாசற்படியில்
கட்டிவைத்திருக்கும் - அந்த
கன்றுக்குட்டியும் தான்.

# 2 - நான்

எழுதிய கவிதைகளை
மீண்டும் மீண்டும்
வாசித்துக்கொண்டிருந்த தருணம்
ஜன்னலில்
வந்தமர்ந்த சிறுபறவையொன்று
உற்று நோக்கியபடி
கவனித்துக்கொண்டிருந்தது.
அது என்ன நினைத்ததோ?
அதன் கூவலில்
எங்கிருந்தோ பறந்துவந்தது
இன்னொரு பறவை
என்னை பற்றியும்
என் கவிதைகளை பற்றியும்
கதைத்துக்கொண்டிருப்பதை கவனிக்க
முடிந்தது
ஒரு பறவையின் சிறகில்
இன்னொன்று சிலாகித்து
கொத்தி கொத்தி
என் காதலை
வெளிப்படுத்திக்கொண்டிருந்தன
தடையின்றி அவ்விரண்டும்.

—

*சாயிராம்,*
தஞ்சாவூர்.
**9443394625.**

# உயரத்திலிருந்து

குதித்த நீர் அஞ்சுகிறது
மேடு கண்டதும்.

என்னோடு பேச வேண்டாம்
பொறு உன் விழிகளோடு
பேசிக் கொள்கிறேன்.

துளிர்க்க விழையும் விதைக்கு
எப்படியும் கிடைக்கிறது
தண்ணீர்.

தேவைக் கதிகமாய்
நிரம்பி வழிகிறது ஏழையின்
வீட்டில் வறுமை.

கையில்
சாட்டையுமில்லை பம்பரமுமில்லை
உன் நினைப்பில் சுற்றுகிறது மனம்.

தர ஏதுமில்லாத போதும் வந்தவர்
நெஞ்சம் இனிக்க நாலு
வார்த்தைகளாவது
கொடுத்தனுப்புகிறாள் தாய்.

வந்தமரும் பறவைகள்
எம்பிப் பறக்க ஏதுவாய் கிளைகளை
வளைக்கிறது மரங்கள்.

கிளையில் துளிர்தெழுந்த
மரத்தின் பார்வையில்
சன்னலாய்த் தாய்மரம்.

மண் பொம்மையின்
கையில் குழந்தை
விதியின் விளையாட்டு.

பிரித்துக் கொட்டிய
சாத்துக்குடி மூட்டை.
எதுவும் என்வசமில்லை.

அவன் தொழிலுக்குப் புதுசு
சரியாய்ச் சலவைச் செய்யவில்லை
நிலவில் கறைகள்.

நீண்ட இரவு  உறக்கம் தொலைத்த
விழிகள்; மின்விசிறியுடன்
பேசிக்கொண்டிருக்கும் கடிகார முட்கள்.

உச்சிமண்டையில் உதயன்
அம்பெனத் தைக்கும்
மூங்கில்மரங்கள்.

ஆகாயம் முகம்
பார்க்கும் கண்ணாடி
கடல்.

ஆறுதல்களால் நிறைவடைய
வேண்டிய மனம்; அழுகிறது
நினைவுகளின் பசியால்.

விழிகளின்றி
அழுதுவழிகிறது வானம்
மழை.

தணலுக்கென்றும்
அதைத் தணிப்பதற்கென்றும்
தனித்தனியே முத்தங்களைத் தா.

மகனமர்ந்ததும் மரக்குதிரை
மன்னர் குதிரையானது
மகன் இளவரசனாகிறான்.

எல்லா பக்கமும்
பூவாகவே
இருக்கிறது பூ!

விடுதலை நாள் இனிப்பு
வழங்கி; கொண்டாடுகிறோம்
விடுமுறை தினமாக.

ஒரு விடியல் ஒரு நாள்
விகிதப்படியில் முதிர்கிறது
அனுபவமும் வயதும்.

வெள்ளையா கறுப்பா
வெள்ளியா தங்கமா
அறியாதது இரும்புப்பெட்டி.

உன்னை நேசிக்கத்தொடங்கிய
நொடிமுதல்; நேசிக்கிறேன்
நிலைக்கண்ணாடியை.

அவளுக்குள் நானுமாய்
எனக்குள் அவளுமாய்
கூடுவிட்டு கூடுபாயும் காதல்.

உன் பார்வைப் புதைக்குழியில்
விழுந்த என்னை மீட்க
யாருமேயில்லை உன்னைத்தவிர!

ஏழைக்குழந்தைகளின்
கனவிலும் வருவதில்லை
சுடுசோறும்,புதுச்சட்டையும்.

கைக்குலுக்கலோடும்
பெயர் பறிமாற்றத்தோடும் முடிகிறது
பலரின் முதல் சந்திப்புகள்.

மழையின் தூய்மையை
மேலும் அழகாக்கிப் பார்க்கும்
மண்.

தேடல் அறிவின் ஆணிவேர்
தேடலைக்கருவாக்கு; வீழ்ந்தவர்
மத்தியில் விதையாய் விழு!

மெத்தப் படித்தவர்
இடுகிறார் கைநாட்டு
பத்திரப்பதிவு.

பூக்களே... இதழ்கள் மேலுள்ள
பனித்துளியை விரட்டிடு
அவள் பூப்பறிக்க வருகிறாள்!

குழந்தையிடம் பொம்மை
இறைவனிடம் மனிதன் உடைந்தாலும்
இருந்தாலும் பொம்மையழகு.

கருவாவது மூன்றுத்திங்கள்
உருவாவது பத்துத்திங்கள்
வயது குறியாவது திங்கள் 12-ல்.

யாரும் பறித்திடாத
பூக்களை; உதிர்ந்தும்
மண்சூடி அழகு பார்க்கிறது.

கருவறையும் இருட்டு
கல்லறையும் இருட்டு

இடைப்பட்ட வாழ்க்கையில் பகட்டு.

சிறப்பு தரிசனம் விரைவு தரிசனம்
தர்ம தரிசனம்; எதிலும்
மாறவில்லை சுவாமியின் தரிசனம்.

பறந்து திரியும் பறவையின்
பஞ்சம் போகிறது; நீ நம்பிக்கை
இறகை விரித்து தேடலைக் காண்.

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602,
கைப்பேசி: 9443139353.



---

# குறுங்கவிதைகள்

1. ஒட்டை குடிசை வீடு
ஒழுகும் மழைநீர்
அழும் குழந்தை ........!!

2. இரவெல்லாம் அலைந்து தேய்ந்த
நிலவு அதிகாலை
தென்னங்கிளையில்
ஓய்வெடுக்கிறது .......!!

3. அதிகரிக்கிறது துரித உணவகங்கள்
குறைகிறது மனிதனின் ஆயுள் ...!!!

4. நீந்த தொடங்கியது
உதிர்ந்த இலை
மழை வந்ததும் ....!!

5. கட்டை வண்டி கட்டிலானது
உழைப்பின் களைப்பில் உறங்குகிறான்
கூலி தொழிலாளி ....!!!

6. தப்பிக்குமா ?
ஓடக்கரையோரம் மீன்கள்
ஒற்றை காலில் நாரை ..........!!

7. கட்டை வண்டி கட்டிலானது
உழைப்பின் களைப்பில் உறங்குகிறான்
கூலி தொழிலாளி ....!!!

8 - நிலவும் வான் மலரும்
நிலவும் வான் மலரும் துளிரும்
முகிலும் மேகமும் களிறும் பிளிறும் //
கொண்டை பூக்களும் கொட்டும்
தேனீக்களும் //
இயற்கையின் கொடையில் வாழ்வோம்
இனிதாய் ....!!!

9 - கூட்டை அடைந்ததும் இளைப்பாறிக்
கொள்கின்றன நிழலில்
பறவையின் நிழல் .....!!!

# 10 - ஹைக்கூ கவிதைகள்

விடுமுறை நாட்கள் //
உணவு தேடி வருகின்றன //
வகுப்பறைக்கு குருவிகள்   ...!

உச்சி வெயிலில் பயணம்
காலுக்கு அடியில் ஒளிந்து கொண்டது
நிழல் .....!

கூட்டை கலைக்க மனமில்லை
திசைமாறிய பறவைகள்
திரும்ப கூடும் ....!!!

யாருடைய வருகைக்காக
பூக்கள் தூவுகிறதோ
சாலையோர மரங்கள் ....!!

வெயிலுக்கு எல்லைக்கோடு வரைகிறது
மரத்தின் நிழல் ....!!

அடர் இருட்டில் இலைமறைவில்
விட்டு விட்டு ஒளிவீசுகிறது
மின்மினிப்பூச்சி ....!!

ஆழிப்பேரலைக்குள் மூழ்கி
மலைமுகட்டில் மறைகிறது சூரியன்
கூடடைய விரைகிறது காகம் ....!!!

கடல் திரை விலக்கி பார்க்கும்
மீனின் கண்களில் விரிகிறது
இன்னோர் வானம் .....!!!

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.